**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.124/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஞானசேகரன் | Father's Name | : | பிச்சைமுத்து |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 22nd day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் திருவாரூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 அன்று காலை திருவாரூர் நகர காவல் உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் ஆகியோருடன் ரோந்து பணியிலிருந்தபோது திருவாரூர் தெற்கு வீதியில் உள்ள அப்பல்லோ பார்மஸி எதிரில் பெரிய வீச்சருவாளுடன் ஒரு நபர் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக சத்தம் போட்டுக் கொண்டிருப்பதாக கிடைத்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:13:43 +0530

தகவலின் பேரில் நாங்கள் சம்பவ இடம் சென்று பார்த்தபோது ஒரு நபர் அருவாளுடன் நான்தான் பெரிய ரவுடி எனக்கு எல்லோரும் மாமுல் தரவேண்டும் என சத்தம் போட்டுக் கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தபோது அவரை பிடித்து விசாரிக்க அவர் திருவாரூர் நகர காவல் நிலைய கொலை வழக்கில் சம்மந்தப்பட்டவர் என தெரிய வந்தது. இளவங்கார்குடி மாரியம்மன் கோவில் தெரு சாமிநாதன் மகன் மணிகண்டன் எனவும் தெரிந்து கொண்டோம். உடனே உதவி ஆய்வாளர் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக சத்தம் போட்டுக் கொண்டிருந்த குற்றத்திற்காக எதிரியை காலை 9.00 மணிக்கு கைது செய்தும் அப்பல்லோ பார்மஸியில் வேலை செய்யும் 2 நபர்கள் சாட்சியுடன் எதிரி வைத்திருந்த அருவாளை காலை 9.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். 10.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டுவந்து எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் நான் ரோந்து பணியிலிருந்ததற்கான பணிப் பதிவேட்டை உதவி ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரி. திருவாரூர் தெற்கு வீதியில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:13:53 +0530

உள்ள அப்பல்லோ பார்மஸியில் CCTV Camera பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. நான் சொல்லும் தேதி, நேரத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்றால் தவறு. நான் சொல்லும் நேரத்தில் எதிரி அந்த இடத்தில் இல்லையெனவும் எதிரி கைது செய்யப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. எதிரி மீது ஏற்கனவே திருவாரூர் நகர காவல் நிலையத்தில் கொலை வழக்கு இருப்பதாலும் ஆஜர் எதிரியை குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறைபடுத்த வேண்டுமென்றாலும் எதிரி மீது மேலும் சில வழக்குகள் பதிய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் உதவி ஆய்வாளர் எதிரி மீது போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:01 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.